1970 ஆகஸ்ட் 27]

திரு. மு. ச. சிவசாமி : குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து பெற்ற கடன் தொகையை அந்த ஒரு காரியத்திற்குத்தான் செலவிட வேண்டும் என்கிற விதிமுறைகள் இருப்பது உண்மைதானா? அல்லது சம்பளம் கொடுக்க முடியுமா? அதற்கு விதி இருக்கிறதா என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே அதுபற்றிய விளக்கங்களைக் கூறியிருக்கிறேன். விதிகள் பற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்விபோட்டால் பதில் சொல்ல முடியும்.

2. அறிவிப்புகள்.

(அ) பேரவையின் மரபிற்கு மாறான ஒரு சொல்லை நீக்குவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் சொல்லப்படுகிற எந்த வார்த்தை பார்லிமெண்டரி, எது அன்பார்லிமெண்டரி என்பதைத் தீர்மானிப்பது அவைத் தலைவர். திரு. ஹாண்டே அவர்கள் * என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினார்கள். ஆக்ஸ்போர்ட் டிக்ஷனரியில் அந்த வார்த்தைக்கு * என்பதாகப் பொருள் இருக்கிறது. ஆகவே அந்த வார்த்தை அன்பார்லிமெண்டரியானது என்று தீர்மானித்து அதை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன்.

1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

Co-operative Marketing Societies

* 81 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether a few permanent employees of the Sriperumpudur Taluk Co-operative Marketing Society Limited, Nazarethpet were suspended on 31st March 1967; and

(*b*) if so, whether any subsistence allowance was being paid to them?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இச்சங்கத்தின் ஊழியர்களில் 4 பேர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

(ஆ) வேலை இரண்டு பேர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இரண்டுபேர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

Dr. H. V. HANDE : Is it not a fact that because there was mismanagement in the affairs of this organisation, the marketing society, to cover up the mistakes committed by the management, they have taken up 4 per cent of the scapegoats and orders were passed suspending these four persons. Out of the four persons, on representation, two persons have been taken back. Will the

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

Government institute a high-level enquiry and see that these four innocent persons are not unnecessarily victimised because of mismanagement of the management?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: I will have a suitable enquiry made into the affairs of this society.

* 82 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Joint Registrar of Co-operative Societies Madras Region had made a surprise inspection of Arni Branch of the North Arcot District Co-operative Supply and Marketing Society Limited, Vellore in the year 1969; and

(b) if so, the result of this inspection?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) கூட்டுறவு வழங்கல் விற்பனைச் சங்கத்தின் ஆரணிக் கிளையை துணைப் பதிவாளர் 11—10—1968 அன்று சோதனை செய்தார்கள்.

(இ) சோதனை செய்கிற நேரத்தில் ரொக்க இருப்பில் குறைவு காணப்பட்டது. கிளையின் மேலாளர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டார். மாவட்ட சங்கம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. கே. விநயகம்: இதிலே எவ்வளவு பணம் கையாண்டதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது? அதற்குக் கொடுத்த தண்டனை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தோராயமாகச் சொல்கிறேன். கையிருப்பு ரூ. 4,500 இருக்க வேண்டிய இடத்தில் ரூ. 500 மட்டும்தான் காணப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தோராயமாக என்ன? சரியான கணக்கு இல்லையா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: கையிருப்பு ரூ. 4,538 84 காசு இருக்க வேண்டிய இடத்தில் ரூ. 581.28 காசுதான் இருந்தது. தற்காலிகமாக மேலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இப்படித் தொடர்ந்து வருஷக்கணக்காக வந்து கொண்டிருக்கிறது. அதன்பேரில் நடவடிக்கை எடுக்கிறோம், நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக, துரிதமாக நடவடிக்கை எடுக்காத காரணத்தால் பலர் தப்பித்துக்கொள்ள வழி ஏற்பட்டு விடுகிறது, என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா? இல்லாவிடில் இனிமேல் ஏற்பாடு செய்யப்படும் உத்தேசம் உண்டா?